
VESUVIUS

# நடத்தை விதிமுறைகள்



# உள்ளடக்க அட்டவணை


எங்கள் மதிப்புகள் ........ 03

ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ........ 05

வர்த்தகம், வாடிக்கையாளர்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ........ 06

லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு ........ 07

பணியாளர்கள் மற்றும் மனித உரிமைகள் ........ 08

வெளிப்படுத்துதல் மற்றும் முதலீட்டாளர்கள் ........ 09

அரசாங்கம், சமூகம் மற்றும் உள்ளூர் சமுதாயங்கள் ........ 10

நலன் முரண்பாடுகள் ........ 11

போட்டியாளர்கள் ........ 12

Speak up ........ 14

# எங்கள் மதிப்புகள்

core

COURAGE
OWNERSHIP
RESPECT
ENERGY

வேலையில் நம்முடைய அன்றாட நடத்தைக்கு வெசுவியஸின் நான்கு கார்ப்பரேட் மதிப்புகள் அடிப்படை. அவை நிலையான நடத்தைக்கு உந்துதல், குழுவின் பொதுவான கலாச்சாரத்தின் வெளிப்பாடு, குழுவின் உருவத்தை எங்கள் வெளிப்புற பங்குதாரர்களுக்கு ஊக்குவித்தல் மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் வழங்கும் வணிக வாக்குறுதியை உறுதிப்படுத்துகின்றன.

எங்கள் மதிப்புகள்

தைரியம்: அச்சங்களை சமாளிக்க ஊழியர்களுக்கு அதிகாரம் அளிக்கும் தைரியத்தின் கலாச்சார வளர்ச்சி, மாற்றம், மற்றும் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதது. தைரியம் நாம் இழக்க மறுக்கும் போது வெளிப்படுகிறது, அதே போல், ஒரு நபர் தமக்காக அல்ல, ஆனால் நிறுவனத்தின் நலனுக்காக, கூடுதல் பொறுப்புடன் பணி ஆற்றும் போது, வெளிப்படுகிறது.

பொறுப்பு: நமது சொந்த வேலைக்கும் மற்றும் நமது அணிக்கும் நாங்கள் பொறுப்புக் கூறுகிறோம் - வெற்றிகளைக் கொண்டாடுகிறோம், பிரச்சினைகள் ஏற்படும் போது, அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்கிறோம். நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில், மற்றும் ஒருவருக்கொருவர்காகவும், நிறுவனத்தின் சாதனைகளில் முதலீடு செய்கிறோம்.

மரியாதை: மரியாதை என்பது நேர்மறையான மற்றும் வெற்றிகரமான பணி கலாச்சாரத்தின் மூலக்கல்லாகும். நாங்கள் ஒருவருக்கொருவரை மதிக்கிறோம், யோசனைகள் எங்களுக்கு உடன்படவில்லை என்றாலும், நிறுவனத்திற்காக மற்றும். ஒரு வலுவான கூட்டு உருவாக்க எங்கள் வெவ்வேறு கருத்துகளையும் முன்னோக்குகளையும் அலகு செய்கிறோம்.

வலிமை: நாங்கள் வெற்றிக்காக பாடுபடுகிறோம் – சிறப்பாக செயல்பட தொடர்ந்து எழுச்சியூட்டியும் ஒருவருக்கொருவர் ஊக்கமளித்தும். தரமான வேலைக்கு, நேர்மறை மற்றும் ஆற்றல்மிக்க பணிச்சூழல் அவசியம். நாங்கள் ஒவ்வொரு நாளும் சிறந்து விளங்குகிறோம், மற்றும் எங்கள் அணிகளைத் வளர ஊக்குவிக்கிறோம்.

# 8 முக்கிய தலைப்புகள்

நமது நடத்தை விதிமுறைகள் 8 முக்கியப் பகுதிகளை உள்ளடக்குகிறது:

**01** ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல்

**02** வர்த்தகம், வாடிக்கையாளர்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள்

**03** லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு

**04** பணியாளர்கள் மற்றும் மனித உரிமைகள்

**05** வெளிப்படுத்துதல் மற்றும் முதலீட்டாளர்கள்

**06** அரசாங்கம், சமூகம் மற்றும் உள்ளூர் சமுதாயங்கள்

**07** நலன் முரண்பாடுகள்

**08** போட்டியாளர்கள்

# 01 ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல்

சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விஷயங்கள் மிகவும் முக்கியமான நிர்வாக பொறுப்புகளாகும். நமது இயங்குமுறையின் மூலம் பாதிக்கப்பட்ட நமது பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், பார்வையாளர்கள், பொதுமக்கள் மற்றும் பிறரின் ஆரோக்கியத்தையும், பாதுகாப்பையும் நாம் பாதுகாப்போம். நமது இயங்குமுறையின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்கள் பற்றிய பொதுமக்களின் கவலைகளை ஆக்கப்பூர்வமாக எதிர்கொள்ள வேண்டும்.

## + மேலும் தகவல்

Vesuvius-காக பணியாற்றும் ஒவ்வொருவரும் இணங்க வேண்டிய இக்கோட்பாடுகள் Vesuvius ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கொள்கைகள் ஆகியவற்றால் ஆதாரம் அளிக்கப்படுகின்றன.

நாங்கள் செய்வோம்

- எல்லா பணியாளர்களுக்கும் ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் பத்திரமான பணிச் சூழல்கள்
- நமது ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அர்ப்பணிப்பு மற்றும் கடமைகளை பூர்த்தி செய்யப் போதுமான மனித மற்றும் பொருள் வளங்கள் மற்றும் பயிற்சி
- உருவாக்க நிலையின் தொடக்கத்திலேயே புதிய தயாரிப்புகள் மற்றும் செயல்முறைகளில் சாத்தியமாகவே இருக்கக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பை கருத்தில் கொள்வது
- மனித ஆரோக்கியத்தை அல்லது சுற்றுச்சூழலை மோசமாக பாதிக்கக்கூடிய பொருட்களின் வெளியீட்டைக் குறைந்தபட்சமாக்குவது,பாதுகாப்பானதாகச் செய்வது அல்லது, நடைமுறைப்படுத்தக் கூடுமானால், தடுப்பது
- பொருட்கள், ஆற்றல், மற்றும் பிற வளங்களை கவனமாகப் பயன்படுத்துவதன் மூலம் வீணாவதைக் குறைத்து மறுசுழற்சி வாய்ப்புகளை அதிகபட்சமாக்குவது
- மதுபானம் மற்றும் போதை மருந்து உட்கொள்வதுடன் தொடர்புடைய ஆபத்துகள் இல்லாத பணிச்சூழலை அளிப்பது

# 02 வர்த்தகம், வாடிக்கையாளர்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள்



நமது குறிக்கோள்களை அடைவதற்கு நீண்ட கால, சாதகமான வாடிக்கையாளர் உறவுகள் அவசியமாகும். ஏற்கனவே உள்ள மற்றும் சாத்தியமாகும் வாடிக்கையாளர்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள், வழங்குநர்கள் மற்றும் பிற வணிக கூட்டாளிகளை கையாள்வதில், நேர்மை, நியாயமான, சீரான முறையில் அனைவரையும் நடத்துவதிலும், பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில், முடிசூடா நற்பெயரை நாம் பராமரிக்க வேண்டும்.

நாம் இவற்றை அளிப்போம்:

- நம்பிக்கையான, பாதுகாப்பான மற்றும் வாடிக்கையாளரின் தேவைகளை பூர்த்தி செய்யும் உயர்தர பொருட்களை தொடர்ந்து வழங்குதல்
- உயர் தரமான, நம்பிக்கை மிகுந்த விற்பனைக்குப் பிறகான சேவையை வழங்குதல்
- Vesuvius பற்றிய தெளிவான, சுருக்கமான மற்றும் பயனுள்ள தகவல்களை அளித்தல் மற்றும் எங்கள் பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்த தவறான அல்லது தவறாக வழிநடத்தும் அறிக்கைகள் அளிப்பதை தவிர்த்தல்s
- நலன் முரண்பாடுகள், பரிசுகள் மற்றும் கையூட்டுகள் சம்பந்தப்பட்டவையோடு கடைப்பிடிக்க வேண்டிய குழுமக் கொள்கைகள் உட்பட அனைத்து வணிகத் தொடர்புகளையும் தூரமிட்டு நடத்துதல்
- மற்றவர்களின் இரகசியத் தகவல்களை பாதுகாத்தல் மற்றும் வழங்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டுமே அத்தகவல்களை பயன்படுத்துவதைத் தவிர வேறு எந்தவிதமான முறையற்ற வணிகச் செயல்பாட்டுக்காகவோ அல்லது தனிப்பட்ட லாபத்திற்காகவோ பயன்படுத்தாமல் இருத்தல்

# 03 லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு



நமது வணிகத்தை நடத்தும் போது எந்த விதமான ஊழல் வழக்கங்களையும் நாம் பொறுத்துக்கொள்வதில்லை.

இதனை அடைவதற்காக:

- எந்தவொரு முறையற்ற வணிக நன்மையை பெற லஞ்சம் அல்லது தூண்டுதலாக, முகவர்கள், சப்ளையர்கள், கூட்டு நிறுவன பங்காளிகள் அல்லது பிறர் உட்பட, வெசுவியஸின் சார்பாக செயல்படும் எந்தவொரு பணியாளரும் அல்லது எந்தவொரு நபரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, சப்ளையர்கள் அல்லது அரசாங்க பிரதிநிதிகள் உட்பட எந்தவொரு நபருக்கும் பணம் அல்லது மதிப்புள்ளஎதையும்வழங்கவோ,கோரவோ ஏற்றுக்கொள்ளவோ மாட்டார்கள்.

- நம்முடைய அல்லது மற்றவரின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆபத்திலிருக்கும் போது தவிர வேறு எப்போதும் உதவுவதற்கான பணம் செலுத்த மாட்டோம்

- பொழுதுபோக்கு மற்றும் விருந்தோம்பல் செய்வதில் எமது பங்கு எப்போதும் சாதாரண வணிகச் செயற்பாட்டின் ஒரு அங்கமாக இருக்கும், தொடர்புடைய அனைத்து சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு நியாயமானதாக இருக்கும், விகிதாச்சாரத்துடனும் பொருத்தமாகவும் இருக்கும், மேலும் ஊழல் நோக்கம் உள்ளது என்ற உணர்வுக்கு இடமளிக்காது

## + மேலும் தகவல்

லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புக் கொள்கைகள் மற்றும் தொடர்புடைய குழு அளவிலான இணக்க முயற்சிகளால் இக்கோட்பாடுகள் ஆதரவளிக்கப்படுகின்றன.

# 04 பணியாளர்கள் மற்றும் மனித உரிமைகள்

பணியாளர்கள் நல்ல நம்பிக்கையுடனும் தனிப்பட்ட கண்ணியத்திற்கான மரியாதை அடிப்படையிலும் கையாளப்பட வேண்டும். Vesuvius ஆனது சர்வதேச மனித உரிமைகள் தரங்களை அது இயங்கும் இடங்களில் ஏற்றுக்கொள்கிறது, மேலும் குழந்தை தொழிலாளர்கள் அல்லது கட்டாயத் தொழிலாளர்களை அதன் செயல்பாட்டில் பயன்படுத்துவதை பொறுத்துக் கொள்ளாது.

நாம் இவ்வாறு செய்வோம்:

- நமது பணியாளர்கள் கூறுவதை கவனமாகக் கேட்கிறோம் மற்றும் உற்பத்தித் திறன், பணியின் தரம் மற்றும் பணியமர்த்தலின் நிபந்தனைகளை மேம்படுத்துவதில் அவர்களை ஈடுபடுத்துதல்
- பணிக்கு ஆட்களை சேர்த்தல், பயிற்சி, பதவி உயர்வு, பணிப்பாதை மேம்பாடு, பணியிலிருந்து நீக்கப்படுதல் மற்றும் இவற்றையொத்த பிரச்சனைகள் நியாயமாக, வெளிப்படையாக மற்றும் தனி நபர் இயல்தன்மை, சாதனை அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் இருப்பது மற்றும் இனம், நிறம், தேசீயம், கலாச்சாரம், வம்சாவளி, மதம், பாலினம், பாலுறவு முறை, வயது, இயலாத தன்மை அல்லது பணிச்செயல்திறன் அல்லது பொருத்தமான சட்டத்தினால் தடை செய்யப்பட்டவற்றுடன் தொடர்பிருக்காத காரணம் ஆகியவை ஒரு பொருட்டில்லாமல் நடத்துவது ஆகியவற்றை உறுதி செய்தல்
- பாகுபாடு அல்லது துன்புறுத்தலை பொறுத்துக்கொள்ள மறுத்தல்
- நமது பணியாளர்களின் உடல் அல்லது மனநலனை எதிர்மறையாக பாதிக்காத பணிச் சூழலை அளித்தல்
- திறன்கள் மற்றும் அனுபவம் மற்றும் நடைமுறைக்கேற்ற அளவில், வணிகத்தின் வெற்றி ஆகியவற்றுக்கு பொருந்தும் வகையில் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல்
- பணியாளர்களையும் குழுமத்தின் தொலைநோக்குப் பார்வை, குறிக்கோள்கள் மற்றும் திட்டங்கள் முதலியவற்றைப் பாதிக்கும் முக்கியமான முன்னேற்றங்கள் குறித்த விஷயங்களில் பணியாளர்கள் பின்தங்கி விடாமல் பார்த்துக் கொள்ளுதல்
- வெளிப்படையான, நேர்மையான மற்றும் மரியாதையான முறையில் பணியாளர்களை தொடர்பு கொள்ளுதல்
- பணி சார்ந்த சச்சரவுகளைத் தீர்க்க பயனுள்ள நடைமுறைகளைப் பராமரித்தல்
- பணியாளர் பதிவேடுகளை இரகசியமாக வைத்துக் கொள்கிறோம் மற்றும் முறையான வணிக நோக்கங்களுக்காக மட்டுமே தனிப்பட்ட தகவல்களை சேகரித்தல், பயன்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்துதல்

## + மேலும் தகவல்

பணிக் கொள்கைகள் மற்றும் நமது மனித உரிமைகள் கொள்கைகளால் இக்கோட்பாடுகள் ஆதரவளிக்கப்படுகின்றன

# 05 வெளிப்படுத்துதல் மற்றும் முதலீட்டாளர்கள்

Vesuvius அதன் பங்குதாரர்களுக்குச் சொந்தமானது. நமது வணிகத்தை ஒரு பொறுப்புள்ள முறையில் நடத்துவோம், நிலையான மற்றும் லாபத்துடன் கூடிய வளர்ச்சிக்கும் பங்கதாரர்களுக்கு மதிப்பை வழங்கவும் முயற்சி செய்வோம். ஆதாரவளங்களை விவேகத்துடனும் பயனுள்ள வகையிலும் பயன்படுத்தி குழுமத்தின் சொத்துக்களை பராமரிப்பதிலும் பாதுகாப்பதிலும் குறிப்பிடும்படியான கவனம் செலுத்தப்படும்.

நாம் இவ்வாறு செய்வோம்:

- மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் மற்றும் வணிக நிதி நிலைமையை துல்லியமாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில், உறுதியான கட்டுப்பாட்டு முறைமைகளால் ஆதாரம் அளிக்கப்பட்ட கணக்குப்புத்தகங்களையும் பதிவேடுகளையும் கொண்டிருத்தல்
- எளிதாக புரிந்துக் கொள்ளக்கூடிய துல்லியமான நிதி தகவல்களையும் குழுமத்தின் நிலைமையின் சமச்சீர் மதிப்பீட்டையும், முறைப்படி சரியான நேரத்தில் முதலீட்டாளர்களுக்கு அளித்தல்
- பெருநிறுவன ஆளுகையில் மிகச் சிறந்த நடைமுறைகளை ஈடுபடுத்துதல்
- ஆளுகை அல்லது குழுமத்தின் வணிகம் குறித்த முதலீட்டாளர்களின் கேள்விகளுக்குத் தெளிவாகப் பதிலளித்தல்
- எல்லா முதலீட்டாளர்களையும் ஒரே மாதிரியாகவும் நியாயமாகவும் நடத்துதல், மேலும் மற்றொருவரின் இழப்பில் ஒரு முதலீட்டாளரையோ அல்லது முதலீட்டாளர்கள் வர்க்கத்தையோ பயனடையச் செய்வதை தவிர்த்தல்
- நம் கடமைகளைச் செய்வதில், ஆலோசகர்களுடனும் தணிக்கையாளர்களுடனும் பேசுவதில் மற்றும் முதலீட்டு சமுதாயத்தோடு பேசுவதிலும் கபடமில்லாமல், நேர்மையாகவும் தொழில்முறை நிபுணத்துவத்தோடும் இருத்தல்
- அனைத்து உள்ளகத் தகவல்களும் அறிவிக்கப்படும் வரை இரகசியமாக பாதுகாத்தல், மேலும் Vesuvius பங்குகளில் வணிகம் செய்வதற்கோ அல்லது அப்படிப்பட்ட நோக்கங்களுக்காக மற்றவர்கள் அதைப் பயன்படுத்துவதை செயல்படுத்தவோ அவற்றை பயன்படுத்தாதிருத்தல்

## + மேலும் தகவல்

ஆளுகை கொள்கைகள், நிதி அறிக்கை கொள்கைகள் மற்றும் நிறுவனப் பாதுகாப்பு மற்றும் உட்புற தகவல்களை கையாள்வதின் கொள்கைகள் ஆகியவற்றினால் இக்கோட்பாடுகள் ஆதரவளிக்கப்படுகின்றன.

# 06 அரசாங்கம், சமூகம் மற்றும் உள்ளூர் சமுதாயங்கள்

நாம் வணிகம் செய்யும் இடங்கள் எங்கிலும் ஒரு நல்ல பெருநிறுவனமாக இருக்க விரும்புகிறோம். அரசியல் நடவடிக்கைகள் மற்றும் வரி செலுத்துதல் சம்பந்தப்பட்டவை உட்பட அனைத்து தேசிய மற்றும் உள்ளூர் சட்டங்கள், நியாயங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை கடைப்பிடிப்போம்.

நாம் இவ்வாறு செய்வோம்:

- உள்ளூர் கலாச்சாரம் பற்றி தெரிந்துகொள்ளுதல், குழு முழுவதும் அனுபவங்களைப் பகிர்வதை ஊக்கப்படுத்துதல், மேலும் உள்ளூர் சமுதாயங்களை இணங்கத்தக்க வகையிலும், புதுமையாகவும் மற்றும் உணர்வுபூர்வமாகவும் நாம் கையாளுதல்

- பிராந்திய மற்றும் உள்ளூர் பிரச்சினைகள், பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரியங்களுக்கு மதிப்பளித்து கணக்கில் எடுத்துக் கொள்ளுதல்

- இவ்விதிமுறையில் அமைக்கப்பட்டுள்ள லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு கொள்கைகள் உட்பட உள்ளூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளிற்கு ஏற்ப அனைத்துப் பொதுத் துறை நடவடிக்கைகளையும் அறநெறியின்படி நடத்துதல்

## + மேலும் தகவல்

மனித உரிமைகள் கொள்கை யினால் இக்கோட்பாடுகள் ஆதரவளிக்கப்படுகின்றன

# 07 நலன் முரண்பாடுகள்



குழுமத்தின் சிறந்த நலனுக்காக செயல்படும் கடமை பணியாளர்கள், அதிகாரிகள் மற்றும் இயக்குனர்களுக்கு உண்டு, மேலும் தனிப்பட்ட முறையில் அவர்களோ அல்லது மற்றவர்களோ லாபம் அடைவதற்கோ அல்லது குழுமத்தின் நலன்களுக்கு எதிராக செயல்படுவதற்கோ அவர்களது அந்தஸ்தை பயன்படுத்தக்கூடாது. குழுமத்தின் நலன்களோடு முரண்படும் அல்லது கடமையைச் செய்வதில் தவறான தாக்கத்தை ஏற்படுத்தும் அல்லது அது போல் தோன்றக்கூடிய தனிப்பட்ட விருப்பங்கள் தவிர்க்கப்பட வேண்டும். நலன் முரண்பாடுகளைத் தவிர்ப்பது என்பது எப்போதும் சாத்தியமானதல்ல. எனவே, பணியாளர் அல்லது அவரது குடும்பம் மற்றும் நெருக்கமானவர்களின் விருப்பங்கள் குழுமத்தின் நலன்களோடு முரண்படுமானால் அல்லது முரண்படக்கூடிய குறிப்பிடத்தக்க ஆபத்து இருக்குமானால், அம்முரண்பாடு குறித்து அல்லது மறைந்துள்ள முரண்பாடு குறித்து பணியாளர் நேரடித் துறை மேலாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

பணியாளர்கள் ஒருபோதும் இவ்வாறு செய்யக்கூடாது:

- நிர்வாகத்திடமிருந்து முன் அனுமதி பெறாமல், நேரடியான அல்லது மறைமுகமான வணிகம், நிதி அல்லது எந்தவித உறவுகளிலும், குழுமத்தின் சார்பாக அல்லாமல், நமது குழுவுடன் வணிகம் செய்கின்ற அல்லது செய்ய இருக்கின்ற அல்லது போட்டி போடுகின்ற வெளி நிறுவனங்களுடன் ஈடுபடுவது
- நிர்வாகத்திடமிருந்து முன் அனுமதி பெறாமல், தாங்களோ அல்லது தங்களுடன் தொடர்புடைய தரப்பினரோ தனிப்பட்ட ஆர்வத்தோடு ஏதேனும் பரிமாற்றத்தில் குழுமத்தை பிரதிநிதித்துவம் செய்வது
- குழுமம் அல்லது வணிகக் கூட்டாளிகளின் அல்லது அவர் பற்றிய இரகசியத் தகவல்களை தவறாக வெளிப்படுத்தவோ அல்லது வேறு விதத்திலோ பயன்படுத்துவது
- குழுமத்துடன் போட்டியிடுவது அல்லது மற்றவர்கள் போட்டியிட உதவி செய்வது
- ஒரு வணிக நிறுவனத்தின் வெளியக நிர்வாகக்குழுவில், அப்படிப்பட்ட குழு உறுப்புரிமையானது குழுமத்தின் நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்டு குழுமத்தின் நலன்களோடு முரண்படுவதில்லை என்று கண்டறியப்பட்டாலொழிய, சேவையாற்றுவது
- எந்த ஒரு வணிகக் கூட்டாளியிடமிருந்து அல்லது போட்டியாளரிடமிருந்து தனிப்பட்ட ஆதாயத்திற்காக பணத்தை கேட்டுப் பெறுவதில்லை அல்லது ஏற்றுக்கொள்வது
- எந்த ஒரு வணிகக் கூட்டாளியிடமிருந்து அல்லது போட்டியாளரிடமிருந்து பணம் சாராத பரிசு, சேவை அல்லது அவர்களின் சுதந்திரம் அல்லது தொழில்முறை நிபுணத்துவ நியாயப்படுத்தலின் மீது முறையற்ற தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது ஏற்படுத்துவது போல் தோன்றக்கூடிய எந்த விஷயத்தையும் ஏற்றுக்கொள்வது

# 08 போட்டியாளர்கள்

நாம் தீவிரமாகவும் நேர்மையாகவும் போட்டியிடுவோம், மற்றும் சட்டவிரோத வழிமுறைகள் மூலம் போட்டிரீதியான அனுகூலங்களை நாடிச் செல்ல மாட்டோம்.

நாம் இவ்வாறு செய்வோம்:

- வணிக ரீதியாக நமது போட்டியாளர்களுடன் நுட்பமானத் தகவல்களை (விலைகள், கொள்திறன், உற்பத்தி, விற்பனை அளவுகள், சந்தைப் பங்குகள், வணிக உத்தி அல்லது செலவுகள் உட்பட) ஒருபோதும் பரிமாறாமல் இருப்பது
- முறையற்ற வழிமுறைகள் மூலம் நமது போட்டியாளர் பற்றிய தகவல்கள் பெறுவதைத் தவிர்ப்பது
- கட்டுப்படுத்தப்பட்ட அல்லது சட்டவிரோதமாக ஒப்பந்தம் செய்யப்பட்ட வர்த்தக நடைமுறைகளில் அல்லது எந்த ஒரு சந்தை நிலையையும் தவறாகப் பயன்படுத்துவதில் ஈடுபடுவது
- நமது போட்டியாளர்கள் அல்லது அவர்களின் பொருட்கள் பற்றிய தவறான அல்லது தவறாக வழிநடத்தும் கருத்துகள் அல்லது கோரிக்கைகள் உட்பட நியாயமற்ற போட்டியில் ஈடுபடுவதை தவிர்ப்பது

## + மேலும் தகவல்

போட்டி மற்றும் நம்பிக்கை-எதிர்ப்பு கொள்கைகளால் இக்கோட்பாடுகள் ஆதரவளிக்கப்படுகின்றன.

# தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு

தனிநபர்களின் தனியுரிமையைப் பாதுகாப்பதற்கும் மதிப்பதற்கும் வெசுவியஸ் உறுதிபூண்டுள்ளார்.

ஒவ்வொருவருக்கும் அவர்களின் தனிப்பட்ட தரவு எவ்வாறு கையாளப்படுகிறது என்பதில் உரிமைகள் உள்ளன. வெசுவியஸ், அதன் செயல்பாட்டின் போது, வெசுவியஸ், அதன் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் பிற மூன்றாம் தரப்பினரைப் பற்றிய தனிப்பட்ட தரவை சேகரிக்கலாம், சேமிக்கலாம் மற்றும் செயலாக்கலாம். அத்தகைய தரவை பொருத்தமான மற்றும் சட்டபூர்வமான முறையில் நடத்த வேண்டியதன் அவசியத்தை வெசுவியஸ் அங்கீகரிக்கிறது.

வெசுவியஸ் தரவு பாதுகாப்புக் கொள்கை உலகளாவிய தரவு பாதுகாப்பு சட்டத்தில் உள்ள கொள்கைகளை பிரதிபலிக்கிறது மற்றும் தரவு பாதுகாப்பு சிக்கல்களை நாங்கள் எவ்வாறு அணுகலாம் என்பதையும் எங்கள் கொள்கை மற்றும் / அல்லது நடைமுறைகள் உள்ளூர் சட்டங்களை விட கடுமையானதாக இருந்தால், நாங்கள் எங்கள் சொந்த தரங்களை கடைபிடிப்போம். ஒரு உள்ளூர் சட்டம் எங்கள் கொள்கைகளை விட கடுமையானதாக இருந்தால், அதற்கேற்ப நாங்கள் எங்கள் கொள்கையை வழிகாட்டியாகப் பயன்படுத்தி உள்ளூர் சட்டத்தை கடைபிடிப்போம்.

# அவ்வாறு வேலை செய்வதை உறுதிப்படுத்திக்கொள்க

விதிமுறைகளின் கோட்பாடுகளுடன் இணக்கமான வகையில் நமது வணிக விவகாரங்களை நாம் எப்போதும் நடத்த வேண்டும். பல சந்தர்ப்பங்களில் பரிசீலனை செய்யப்பட்ட நியாயப்படுத்தலை பிரயோகிக்க வேண்டிய தேவை ஏற்படும் மற்றும் விதிமுறைகளின் பொருள் அல்லது பரவல் எல்லை குறித்து உங்களுக்கு சந்தேகமிருந்தால், உங்கள் மேற்பார்வையாளர் அல்லது பிற குழு அதிகாரியுடன் தயவு செய்து கலந்தாலோசிக்கவும். இவ்விதிமுறைகளுடன் இணக்கமில்லாமல் இருப்பதன் பின்விளைவுகள், Vesuvius-க்கும் மற்றும் அதன் ஒவ்வொரு பணியாளர் ஆகிய இரு தரப்பினருக்கும், அபராதங்கள், தண்டனைகள், நற்பெயருக்கு இழுக்கு மற்றும் குற்றவியல் பொறுப்பு போன்ற வகையில் மிகவும் கடுமையானதாக இருக்கும். விதிமுறைகளின் மீறல் என்று சந்தேகிக்கப்பட்டாலோ அல்லது அடையாளம் காணப்பட்டாலோ, தகுந்த புலன்விசாரணை நடத்தப்படும். பொருத்தமான இடத்தில், பதவி நீக்கம் வரையிலான மற்றும் அது உட்பட்ட ஒழுங்கு இவ்விதிமுறைகள் அவ்வப்போது மறுஆய்வு செய்யப்படும். அது எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பதையும் நாங்கள் கண்காணிப்போம். இவ்விதிமுறைகள் பற்றிய எந்தக் கருத்துக்களும் குழுமத்தின் பொது ஆலோசகருக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

# Speak Up

வெசுவியஸ் ஆனது அனைத்து பொருத்தமான சட்டங்கள், வெசுவியஸ் நடத்தைக்கான நன்னெறி மற்றும் வெசுவியஸ் கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றின் மூலம் உலகளவில் உயர் தர நன்னெறிகளுக்கான தரங்களைப் பேணி வருகிறது.

உங்களுக்கு ஒரு குறை அல்லது சந்தேகம் இருந்தால் தெரிவிப்பதற்கான வழிமுறைகள் ஒன்றின் மூலமாக நடைமுறைக்கு சாத்தியமானவகையில் கூடிய விரைவில் அதை நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

## எப்படி ?

### நேரில்:

உங்கள் லைன் மேலாளர், அல்லது மாறாக பேசுவதற்கு வசதிப்படும் என நீங்கள் உணரக்கூடிய முதுநிலை மேலாண்மை உறுப்பினர் ஒருவரிடம் தெரிவிக்கலாம். நேரில் செய்யப்படும் அனைத்து அறிவிப்புக்கள் ரகசியமானதாக கையாளப்படும்.

### தொலைபேசி அல்லது ஆன்லைனில்:


கீழே கொடுக்கப்பட்டுள்ள 24 மணிநேர இலவச இரகசியமான Speak up Helpline– ஐ தொடர்பு கொள்ளவும், அல்லது **www.expolink.co.uk/vesuvius** இல் ஆன்லைனில் பதிவு செய்யவும், உங்களுடைய முறையீடுகளை உணர்வுபூர்வமாகவும், இரகசியமாகவும் மற்றும் அழைப்பவர்களின் விவரங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை

## அடுத்து என்ன நடக்கும் ?

அனைத்து அறிவிப்புகளும் தீவிரமாகவும் ரகசியமாகவும் கையாளப்படும் மற்றும் நிறுவனத்தினுள்ளாகவே உரிய மட்டத்தில் செயலாக்கம் செய்யப்படும். செய்த அறிவிப்பு எப்படி கையாளப்படுகிறது மற்றும் அதன் விளைவு பற்றி அறிவிப்பு செய்பவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

**ஒரு குறை பற்றி எந்த ஒரு வழிமுறையையும் உபயோகப்படுத்தியிருந்தாலும், நல்லெண்ண அடிப்படையில் ஒரு குறை பற்றி தெரியப்படுத்தியதற்காக எந்த ஒரு பணியாளரும் தண்டனை பெறவோ அல்லது நஷ்டமடையவோ மாட்டார்கள். பெறப்பட்ட தகவலானது உணர்ச்சிபூர்வமாகவும் ரகசியமாகவும் கையாளப்படும் மற்றும் குரல் கொடுப்பவருக்கு எதிரான தாக்குதல் சகித்துக்கொள்ளப்படுவதில்லை.**

வெசுவியஸ் பணியாளர்கள், வெசுவியஸ்க்கு பிரதிநிதித்துவம் செய்பவர்கள் மற்றும் அவர்களின் சார்பாகப் பணியாற்றுபவர்கள் ஆகிய அனைவரும் உலகில் எங்கிருந்தாலும் நன்னெறி அல்லது கொள்கை மீறல் தொடர்பான எந்தக் குறை அல்லது சந்தேகங்களுக்காக குரல் எழுப்புவது உள்பட, சட்டம், நடத்தை நன்னெறிகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றுக்கு உடன்படுவது அவசியம்.



VESUVIUS

Vesuvius plc
165 Fleet Street
London EC4A 2AE

T +44 (0)20 7822 0000
www.vesuvius.com

January 2020 (Tamil)